இணைந்த சேவைகள் சுற்றறிக்கை : 05/2018

எனது இலக்கம் : CS/DOS/21/01/05

அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு,
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.09.10

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள் மற்றும்
நிறுவனத் தலைவர்களுக்கு

## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்களது தரம் ரீதியான பதவியுயர்விலுள்ள சிக்கலினைத் தீர்த்தல்

இலக்கம் 1774/31 மற்றும் 2012.09.07 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலக்கம் 1745/11 மற்றும் 2012.02.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணத்தின் 14(ii)(அ) பிரிவிற்கமைய **MN 4 – 2006** (ஏ) சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் தரம் III இற்குரிய சம்பளம் நியமிக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கு அல்லது தரத்திற்கு கட்டுப்பட்ட பிரிவினராக பத்து (10) வருடங்களுக்கு குறையாத ஆனால் இருபது (20) வருடங்களுக்கு குறைந்த சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அத்தோடு அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் 2011.08.01 ஆந் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆந் தரத்துக்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

02. அவ் அலுவலர்கள் பத்து (10) வருடங்களை விட அதிகமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள ஆனால் பல்வேறு காரணங்கள் நிமித்தம் 2011.08.01 ஆந் திகதி வரை தரம் III பதவியில் கடமையாற்றும் நிலை ஏற்பட்டமையினால் அவர்களுக்கு பாதிப்பிழைக்கப்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு இவ் அலுவலர்கள் தொடர்பாக பின்வரும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அறியத்தரப்பட்டுள்ளது.

1. சகல அலுவலர்களும் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையினுள் உள்ளீர்க்கப்படுவார்கள்.

2. உள்ளீர்க்கப்பட்ட திகதிக்கு பத்து (10) வருடங்களை விட அதிகமான முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களது குறித்த (10) வருட காலத்தினை விட மேலதிகமாகக் கடமையாற்றிய சேவைக் காலமானது அடுத்த பதவியுயர்வுக்கான (அதாவது தரம் I ) சேவைக் காலத்தினைக் கணிக்கும்போது பயன்படுத்தப்படும்.

**ஒப்பம்/. கே.வீ.பீ.எம்.ஜே. கமகே**

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்